ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத்₃ வரவரமுநயே நம:

# நம்பிள்ளை வைபவம்

ஸ்ரீ உ வே காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி ஸாதித்த
உபந்யாஸத்தின் கட்டுரை வடிவம் - வழங்குபவர் *யதிராஜபாதுகா*
ஆசிரியர் ஸ்ரீ உ வே V V ராமாநுஜம் ஐயங்கார் ஸ்வாமி

---

*எம்பெருமானார் தர்ஶநம்* என்று வழங்கப்படும் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் உபயவேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. ஸம்ஸ்க்ருத வேதாந்தம், த்ராவிட வேதாந்தம் என்ற இரண்டையும் சேர்த்து *உபயவேதாந்தம்* என்று வழங்குவர். ஆத்மாவுக்கு நன்மையை விரும்பும் ஒரு ஸம்ஸாரி ஜீவாத்மா உபயவேதாந்தத்தை நன்றாக அறிய வேண்டும். வடமொழி வேதாந்தத்தினுடைய அர்த்த க்ரஹணம் உபநிஷத் ப்ரஸ்தாநம், கீதா ப்ரஸ்தாநம், ப்ரஹ்மஸூத்ர ப்ரஸ்தாநம் எனப்படும் ப்ரஸ்தாந-த்ரயத்தின் மூலமாக ஏற்பட வேணும். உபயவேதாந்தமும் நமக்கு இரண்டு கண்கள் போலவாம். இவை இரண்டும் ஒருமித்த கருத்துக்களைக் கொண்டவை.

*ஸ்ரீமந்நாராயணனே பரமாத்மா; அவனே பரம்பொருள்; அவனே ஸர்வஸ்மாத்பரன்; அவனே வேதவேத்யன்; அவனே சேதநாசேதநாத்மகமான இந்த ப்ரபஞ்சத்துக்கு த்ரிவித காரணமுமாய் இருப்பவன்; இந்த ப்ரபஞ்சமானது அவனுக்கு ஶரீரமாய் - அதாவது அவனால் தரிக்கப்படுவதாய், அவனால் நியமிக்கப்படுவதாய், அவனுக்கு ஶேஷமாய் இருக்கிறது. அவனுடைய க்ருபையே நமக்குத் தஞ்சம். அவனும் பெரியபிராட்டியாருமான திவ்யதம்பதிகள் திறத்திலுண்டான கைங்கர்யமே பரமபுருஷார்த்தம்* என்று தத்வ ஹித புருஷார்த்தங்களை உபயவேதாந்தம் நமக்கு ஸாரமாகத் தெரிவிக்கிறது. இந்த்ரியங்களால் அறிய முடியாத இந்த அர்த்தங்களை நாம் உபயவேதாந்தத்தைக் கொண்டே அறிய முடியும்.

உபயவேதாந்த ப்ரசாரம் உச்ச கட்டத்தில் நடந்தது நடாதூரம்மாள் காலத்தில். இது பெருமாள்கோவிலை மையமாகக் கொண்டு நடந்தது. இதன் வளர்ச்சியில் முக்ய பங்கு வஹித்தவர் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் என்று வழங்கப்படுபவரான ஸ்ரீஸுதர்ஶநபட்டர். உபய வேதாந்தமானது முநித்ரய ஸித்தாந்தமாகக் கொள்ளப்படுகிறது. முநித்ரயமாவது- நாத முநி, யாமுநமுநி, ராமாநுஜமுநி என்ற மூவர். இவர்களை முறையே உபயவேதாந்த ப்ரவர்த்தகர், வர்த்தகர், ரக்ஷகர் என்று சொல்லலாம். ரக்ஷகரான ராமாநுஜர் காலத்தில் உபயவேதாந்தம் மிகவும் வ்ருத்தியை அடைந்தது; நடாதூர் அம்மாள், ஶ்ருதப்ரகாஶிகா சார்யர் காலத்தில் உச்ச கட்டத்தை அடைந்தது. நம் ஸ்வாமி எம்பெருமானார் அருளிச்செய் துள்ள ஸ்ரீபாஷ்யத்தை விரிவாக விளக்கிக் கூறுவதே ஶ்ருதப்ரகாஶிகை என்னும் க்ரந்தம். ஆசார்யனிடம் பல முறைகள் ஸாம்ப்ரதாயிகமாகக் கேட்ட அர்த்தங்களை ப்ரகாஶிப்பிக்கும் க்ரந்தம் என்பதால் *ஶ்ருதப்ரகாஶிகை* என்று பெயர் பெற்றது. ஶப்தம் அர்த்தம் இரண்டும் *நடாதூர் அம்மாள்* என்று ப்ரஸித்தரான வாத்ஸ்ய வரதாசார்யருடையது. இவற்றைப் பட்டோலை கொண்டு (ஏடுபடுத்தி) ப்ரகாஶிப்பித்த பெருமையால் ஸ்ரீஸுதர்ஶநபட்டர் *ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்* என்று பெயர் பெற்றார். இது 36000 க்ரந்தங்கள் கொண்டது என்பர். 32 உயிரெழுத்துக்களைக் கொண்டது ஒரு க்ரந்தமாகும்.

இதைப்போன்று த்ராவிட வேதாந்தமும் முநித்ரய ஸித்தாந்தமே! திருவாய்மொழியை ஈன்ற தாய் நம்மாழ்வார்; வளர்த்த இதத்தாய் நம் ஸ்வாமி எம்பெருமானார். அதற்கு 6000, 9000, 24000, 36000 என்ற க்ரந்த அளவுகளில் வ்யாக்யாநங்கள் அவதரித்துள்ளன. 12000 என்ற பதவுரை விளக்கமும் உண்டு. இவற்றுள் ஈடு 36000 என்பது ஒரு ஶ்ருதப்ரகாஶிகை. நம்பிள்ளையின் திருவாக்குகளைக் கேட்டு ஏடுபடுத்தினார் அவர்தம் ஶிஷ்ய ரான வடக்குத்திருவீதிப்பிள்ளை. நம்பிள்ளை விளங்கிய இடம் கோயில் (திருவரங்கம்). இந்த மஹாசார்யருடைய காலம் நடாதூர் அம்மாள் காலத்துக்கு மிகவும் முற்பட்டது. வடக்குத்திருவீதிப்பிள்ளை ஏற்படுத்திய வ்யாக்யாநம் நீண்ட காலம் ஓராண் வழியாகவே ரக்ஷிக்கப்பட்டு வந்து, வடமொழி ஶ்ருதப்ரகாஶிகை ப்ரசாரம் அடைந்ததற்குப் பல ஆண்டு கள் பின்னரே நாடறிய ப்ரசாரத்தில் வந்தது.

இனி நம்பிள்ளை வைபவத்துக்கு வருவோம். வாத்ஸ்ய வரதாசார்யரான நடாதூர் அம் மாளைப் போன்று இவரும் (நம்பூர்) வரதாசார்யர் என்று திருநாமம் பெற்றவரே! நம்பெரு மாள், நம்மாழ்வார், நஞ்ஜீயர் என்பதைப் போலே இவர் நம்பிள்ளை என்று பெயர் பெற் றார். பிள்ளை என்பது பெருமதிப்புக்குரியவர் என்னும் அர்த்தத்தைக் காட்டும். கூரத்தாழ் வானேபாதி விளங்கியதால் பட்டரைப் *பிள்ளை* என்று அழைத்தார்கள் என்று அறி கிறோம். நம்பிள்ளை முன்னர் நம்பூர் வரதாசார்யர் என்று தம்முடைய க்ராமத்தை இட்டு

அழைக்கப்பட்டு வந்தார். நம்பூர் வரதர் *நம்பிள்ளை* என்று தம் ஆசார்யரான நஞ்சீயராலே அபிமானத்தால் அழைக்கப்படுபவரானுர். இது ஒரு தனியேற்றம்.

மாதவாசார்யார் என்பவர் மஹாவித்வானுய் மேல்நாட்டில் (கர்நாடக ப்ரதேஶத்தில்) வாழ்ந்தவர். *வேதாந்தி* என்று புகழ் பெற்றிருந்தார். உடையவருடைய நியமநத்தின்படி பட்டர் மேல்நாடு சென்று அத்வைதியான அவரைத் திருத்தித் தம் ஶிஷ்யராக்கிக் கொண்டார். வேதாந்தி பட்டரின் அநுக்ரஹமடியாக எம்பெருமானுர் தர்ஶநத்தின் ப்ரமேயார்த்தங்களை விரைவில் கற்றுத் தேர்ந்தார். பட்டர் அபிமாநத்துடன் இவரை *நஞ்சீயர்* என்றே அழைப்பர். பட்டருடைய காலத்துக்குப் பிறகு அவருடைய ஸ்தாநத்தில் ஓராண்வழி ஆசார்யராக எழுந்தருளி இருந்தார் நஞ்சீயர். இவருடைய பூர்ண கடாக்ஷத்துக்குப் பாத்ரமானவர் என்பது நம்பிள்ளைக்குண்டான வைபவமாகும். திருவாய்மொழியின் அர்த்தவிஶேஷங்களை நஞ்சீயர் நம்பிள்ளைக்கு ஸாதிக்க, அவற்றை அவருடைய நியமநமடியாக *9000ப் படி* என்ற அளவில் ஏடுபடுத்தி *நம்பிள்ளை* என்று அவரால் பாராட்டப் பெற்றுர்.

தம் குலத்தையிட்டுப் பெருமை பாராட்டிய ஒருவர் ஜீயரிடம் வந்து, தாம் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயிக்க விரும்பாததால் தமக்குத் தனியாக தர்ஶந ப்ரமேயார்த்தங்களை ஸாதிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தார். பரம உதாரரான ஜீயர் அதற்கு ஸம்மதித்து, *நீர் நம்பிள்ளையிடம் கேளும்; அவர் நம்மைவிட விஶதமாகவே ஸாதிப்பர்* என்று நியமிக்க, வந்தவர் *தண்டனிடவேண்டுமே* என்று தயங்க, ஜீயரும் *அப்படி நிர்ப்பந்தமில்லை* என்று சொல்லி, பிள்ளையிடம் **அவர் உம்மை தண்டனிடமாட்டார்; *ஆசார்ய நியமநமிது* என்று சொல்லும்** என்று நியமிக்க, பிள்ளையும் அப்படியே திருவிருத்தம் சொல்லி முடித்துத் திருவாய்மொழியில் *பயிலும் சுடரொளியின் அர்த்தங்களை விஶதமாக அநுபவிப்பிக்க, கேட்டிருந்தவர் பாகவத ப்ரபாவத்தை மெய்யே உணர்ந்து நம்பிள்ளையை தண்டனிடப்புக, நம்பிள்ளை (ஆசார்ய நியமநம் அல்லாதது என்று) அதை அங்கீகரிக்காமல் காலக்ஷேபத்தை நிறுத்திவிட்டார். ஶிஷ்யரும் ஜீயரிடம் சென்று, *அடியேன் நெஞ்சில் இருந்த மருள் அகன்றது; நம்பிள்ளையை அடியேன் தண்டனிடுவதை ஸ்வீகரிக்கும்படி சொல்லியருள வேண்டும்* என்று ப்ரார்த்தித்தார். ஜீயரும் பிள்ளையிடம் விஷயத்தைச் சொல்லி காலக்ஷேபத்தை தொடர்ந்து நடத்தி முடிக்கும்படி நியமித்தார்.

இது நம்பிள்ளையின் வைதுஷ்யத்துக்கும், குணபூர்த்திக்கும் ஒரு எடுத்துக்காட்டு. இதைப் போன்று அவருடைய வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு, அதிலும் குறிப்பாக ஆசார்ய புருஷர்களுக்கும், வித்வான்களுக்கும் ஒரு மடங்கு ஜ்ஞாநம் இருக்குமாகில் அது கார்யகரமாவதற்கு (தமக்கும் பிறர்க்கும் பயன்படுவதற்கு)

மூன்று மடங்கு ஆத்மகுணங்கள் இருக்க வேண்டும் என்பர் பெரியோர். இந்த வைபவம் நம்முடைய பூர்வாசார்யர்கள் எல்லாருக்கும் இருந்தது என்றாலும், நம்பிள்ளையிடம் வைதுஷ்யமும் அதை மிஞ்சிய ஆத்மகுணயோகமும் அபாரமாக நிறைந்திருந்தன.

நம்பிள்ளையுடைய ஶிஷ்யர்களில் முதன்மையானவர்கள் வடக்குத்திருவீதிப்பிள்ளையும், பெரியவாச்சான்பிள்ளையும். *ஓதுவாய்மையும் (பெரியதிருமொழி 5-8-7) பாசுர வ்யாக்யாநத்தில் பெரியவாச்சான்பிள்ளை —

> **முற்படத்வயத்தைக் கேட்டு, இதிஹாஸபுராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷ-ப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம்ஸைகளையும் அதிகரித்து, போது போக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப்போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே *ஒருத்தன்* என்பது**

என்று அருளிச்செய்துள்ளார். இங்கு *பிள்ளை* என்பது நம்பிள்ளையைக் குறிக்கும். நம்பிள்ளையின் வித்யா-ப்ரபாவமும் பிறருக்குக் கற்பிக்கும் திறனும் நன்கு வெளியாகின்றன. நம்பிள்ளை தம்முடைய அந்தரங்க ஶிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்தது திருவரங்கத்தில் உள்சுற்றில் ஸேனை முதலியார் ஸந்நிதி முன்புள்ள மண்டபத்தில் என்று சொல்வர். அதைப் பெரியபெருமாள் அர்ச்சா ஸமாதியைக் கடந்து எழுந்திருந்து வந்து பலகணி வழியாகப் பார்த்த போது *திருவிளக்குப்பிச்சன்* என்ற குற்றேவலன், *இது முறையன்று; போய்ப் படுக்க வேணும்* என்று தடுத்ததாக ஐதிஹ்யமுள்ளது.

நம்பிள்ளையின் வாக்-சாதுர்யம் அபாரமாயிருக்கும். அம்மங்கியம்மாள் என்பவர் பரமபதித்த போது நம்பிள்ளை அவர் திருமாளிகைக்கு எழுந்தருளினர். பரமபதித்த அம்மாளுடைய தேவிகள் வருத்தம் ஒன்றும் இன்றி ப்ரஸந்நையாய் (மலர்ந்த முகத்தை உடையவளாய்) காணப்பட, நம்பிள்ளையுடன் வந்த ஶிஷ்யர்கள் *இதற்கு காரணம் என்ன?* என்று கேட்க, பிள்ளையும், *இருவரும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் அம்மாள் தம் தேவிகள் விஷயத்தில் ஒரு விரோதமும் பண்ணவில்லை; மனமொத்த தம்பதியாக வாழ்ந்தனர்; அவர் பெற்ற பேற்றைக் குறித்து இவர் மகிழ்ந்திருக்கிறார்; வருந்தவில்லை* என்று ஸமாதாநம் அருளிச்செய்தார்.

பின்னர் பிள்ளை ஶிஷ்யர்களிலே ஒருவர் திருநாடலங்கரித்த போது பார்யா புத்ராதிகள் ஆசார்யன் திருவடிகளில் வந்து அழுதுகிடக்க, நம்பிள்ளையும் வருத்தம் தெரிவித்து அவர்களுக்குத் தக்க ஆறுதல் சொல்ல, அதைக் கேட்ட ஶிஷ்யர்கள், *இதற்கடியென்?* என்று

கேட்க, *சூழ்விசும்பில் ஆழ்வார் பாடியபடி முக்தாத்மாவின் வரவினுல் திருநாடே கொந்தளித்தபடி கண்டால் இழந்த இந்த நாடு எப்பாடு பட வேண்டும்?* என்று ஸமாதானம் அருளிச்செய்தார். பிள்ளையுறங்காவில்லிதாஸர் பரமபதம் எய்திய போது பொன்னுச்சியார் மிகவும் உத்ஸாஹத்துடன் சரமத் திருமேனியை எழுந்தருளப் பண்ணிப் போனதும், *தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன; செய்வதொன்று அறியேனே* என்று அநுஸந்தித்துக் கொண்டே மூச்சடங்கிய சரித்ரம் இங்கு அநுஸந்தேயம்.

**ஸ்ரீவைஷ்ணவனுக்கு *பேறு தப்பாது* என்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும் அமைய வேணும்; இதற்கு அடிப்படையாவது யாது?** என்று மஹாபாஷ்யபட்டர் என்பவர் நம்பிள்ளையிடம் கேட்டார்.

ஸ்தி$_2$தே மநஸி ஸுஸ்வஸ்தே$_2$ ஶரீரே ஸதி யோ நர:|
த$_4$ாதுஸாம்யே ஸ்தி$_2$தே ஸ்மர்த்தா விஶ்வரூபஞ்ச மாமஜம் ||
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட$_2$பாஷாணஸந்நிப$_4$ம் |
அஹம் ஸ்மராமி மத்$_3$ப$_4$க்தம் நயாமி பரமாம் க$_3$திம் ||

(மனம் கலக்கமின்றி நிலைநிற்கையில், ஶரீரம் நோயற்று நன்ருக இருக்கையில், ஶரீரத்தில் வாதம், பித்தம், ஶ்லேஷ்மம் என்னும் மூன்று தாதுக்களும் ஒரே அளவாய் இருக்கையில், எவன் - இந்த லோகத்தை ஶரீரமாகக் கொண்டும், பிறப்பு முதலான விகாரங்கள் அற்றவனுமான - என்னை நினைக்கிருனே, பிற்காலத்தில், கட்டையோடும் கல்லோடும் ஒத்தவனுய், மரணமடையும் தருணத்தில் அந்த என்னுடைய பக்தனை நானே நினைக்கிறேன்; அவனை உயர்ந்த பதவிக்கு - என்னுடைய மேலான லோகத்துக்கு அழைத்துச் செல்கிறேன்)

என்று ஸ்ரீவராஹ சரம ஶ்லோகம். இதுதான் ஸ்ரீவராஹப்பிரான் ஸம்ஸாரிகளான நம்மைக் குறித்துச் செய்தருளிய அபயப்ரதாநம். ஒருவன் நல்ல உடல் நிலையும் மன நிலையும் பெற்றிருக்கிற காலத்தில், *பகவானே தஞ்சம்* என்ற அத்யவஸாயத்தையும் (திடமான நம்பிக்கையையும்), *ப்ராண வியோகம் ஏற்படுகிற காலத்தில் பேறு தப்பாது* என்ற விஶ்வாஸத்தையும் பெற்றிருக்க வேணும். ஆனுல் அவன், தான் முன்பு செய்துள்ள பெரும் பாவங்களை நினைத்திருக்கக் கூடும். மேலும், ஈஶ்வரன் ஶாஸ்த்ர மர்யாதையில் நோக்குடையவன், ஸ்வதந்த்ரன் என்பதையும் எண்ணிப் பார்க்கக் கூடும். அந்தக் காலத்தில், **பேறு தப்பாது* என்று எப்படித் துணிவது?* என்று அவனுடைய மனம் குழம்பக் கூடும். இக்காரணத்தால், **பரமபதம் ஸித்தம்* என்று எப்படி அத்யவஸித்திருப்பது?**

என்னும் கேள்வி எழக்கூடும். இதற்குண்டான ஸமாதாநம் இருக்கும்படி:-

1. மோக்ஷத்திலே இச்சையுடைய ஒரு ஸம்ஸாரி ஜீவாத்மாவானவன் ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனையே உபேயமாகவும் (மேலான புருஷார்த்தமாக அடையப்படும் பொருளாகவும்), உபாயமாகவும் (அதை அடைவிப்பவனாகவும்) அறுதியிட்டிருக்க வேண்டும்.

2. நெடுங்காலம் இழந்து கிடந்த வஸ்துவைக் காட்டித் தந்த ஆசார்யன் பக்கலிலே கனக்க விஶ்வாஸம் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதாவது, இந்த உண்மையைக் காட்டித் தந்து, அதில் நம்பிக்கையை உண்டு பண்ணி வளர்த்த ஆசார்யன் பக்கல் ப்ரீதி விஶ்வாஸங்களை உடையவனாய் இருக்க வேண்டும்.

3. ஆசார்யன் உபதேஶிக்கைக்கு மூலமான ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களின்படியே எம்பெருமானார் தர்ஶநமே ஸித்தாந்தம் என்று திடமாக நம்பியிருக்க வேண்டும்.

4. ஸ்ரீராமாயணம் கொண்டு பகவத்குணாநுபவம் பண்ண வேண்டும்.

5. ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலே அவற்றின் அர்த்தாநுஸந்தத்தானத்துடன் போது போக்க வேண்டும்.

ஸித்தாந்தமாவது ப்ரமாணங்களால் தீர்மானிக்கப்பட்ட முடிவு. வேதாந்தார்த்தங்களை உள்ளபடி காட்டித்தருவன ஸ்ரீபாஷ்யம் முதலான ஶாஸ்த்ர க்ரந்தங்கள். இவற்றைக் கொண்டு அறிந்த அர்த்தங்களில் மாறாத திடமான நம்பிக்கை வேண்டும். ஶாஸ்த்ரம் கூறும் உண்மைகளை ஸதாசார்யன் மூலமாக அறிந்து, நமக்கு உபாய உபேயங்கள் பகவானே என்பதில் திடமான நம்பிக்கை கொள்ள வேணும். ஶாஸ்த்ர விஶ்வாஸத்துக்கு - அதாவது, அர்த்தங்களை மனதிலே திடமாகப் பதிய வைத்துக் கொள்வதற்கு ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை ஸதாசார்யன் ஸந்நிதியில் அதிகரிக்க வேணும். அருளிச்செயல் அநுஸந்தாநத்தாலே நல்லபடியாகப் போதுபோக்க வேணும். ஸ்ரீபாஷ்யம் முதலான வடமொழி வேதாந்த க்ரந்தங்களும் அருளிச்செயல்களும் *உபாயமும் உபேயமும் பகவானே* என்னும் அர்த்தத்தை வலியுறுத்துகின்றன. இப்படி அறிந்தால் *பேறு தப்பாது, பரமபதம் ஸித்தம்* என்ற துணிவு, தானே ஏற்படும். பகவான் பலநிலைகளில் வெளியிட்ட சரம ஶ்லோகங்களின் அர்த்தாநு-ஸந்தானமும் உபாய உபேயங்களைப் பற்றிய விஶ்வாஸத்தை வளர்த்து திடப்படுத்தும்.

உபாயபக்தியுக்தனுக்கு அந்திமஸ்ம்ருதியை ஶாஸ்த்ரம் விதிக்கிறது. இவ்விஷயம் கீதை

யிலும் எட்டாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டுள்ளது. பகவத் ப்ராப்திக்கு உபாயமாகப் பற்றும் ஶாஸ்த்ரோக்தமான பகவத்பக்தி உபாய பக்தி எனப்படுகிறது. இது பல ஜந்மங்கள் நெடுகிச் செல்லும். மேலும் மரண காலத்தில் நினைவு(அந்திம-ஸ்ம்ருதி) அவனைப் பற்றிய தாக இருக்க வேணும். மரண காலத்தில் பெரும்பாலும் தன் நினைவு இராது என்பதால் அந்திம-ஸ்ம்ருதி அரிதாகும்.

*எம்பெருமானே! நான் குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமாய் இருப்பவன். (உன்னைத்தவிர) வேறு உபாயம் அற்றவன். (உன்னைத்தவிர) வேறு உபேயமும் அற்ற வன். நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக* என்று ப்ரார்த்திக்கும் அறிவே *ஶரணாகதி* எனப்படுகிறது. பகவானைக் குறித்து ஶரணாகதி நிஷ்டையிலே ஊன்றி இருப்பவன் ப்ரபந்நன் ஆவான். இவனும் பக்தனே! ஆனாலும் இவன் பக்தியைப் பேற்றுக்கு உபாய மாகக் கொள்ளாதவன். *அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்* என்பது ஸ்ரீவராஹப்பெருமாளுடைய திருவாக்கு. பக்தியோக நிஷ்டனுக்கு அந்திம-ஸ்ம்ருதி விதி யாகையால் இங்கு அஹம்-ஸ்மராமி - *நினைவை நான் செய்கிறேன்* என்பது ப்ரபந்நன் விஷயமே! ஶ்லோகத்தில் *மத்பக்தம்* என்பது ப்ரபந்நனையே குறிக்கும். *ஆழ்வார்கள் பக்தி-பாரவஶ்யத்தால் ப்ரபந்நர்கள்* என்பது ஸம்ப்ரதாயம்.

*பகவானே உபேயம், அவனே உபாயம்* என்பது உபயவேதாந்தத்தில் ஸாரமாகச் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தமாகும். இந்த உண்மையை நமக்குக் காட்டித் தருவதற் காகவே நம் ஸ்வாமி எம்பெருமானார் திருவவதாரம் செய்தருளினார் என்றும் சொல்வர். நம் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களிலே நிஷ்கர்ஷித்திருக்கும் அர்த்தங்களை ஈட்டில் ஆங்காங்கே திருவாய்மொழிப் பாசுரங்களுடன் ஐகரஸ்யப்படுத்திக் காட்டியருளியுள்ளார் நம்பிள்ளை. *இது (திருவாய்மொழி) கொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்க விடுவர்* (ஆசார்ய ஹ்ருதயம்) என்கையாலே இரண்டும் ஏகார்த்த ப்ரதிபாதகம் என்பது தெளிவு. ஆகையால் நம்பிள்ளை மஹாபாஷ்ய பட்டருக்கு *ஸித்தாந்தம் ஸ்ரீபாஷ்யத்தாலே* என்றார்.

ப்ரஸ்தாந-த்ரயத்தின் ப்ரமேயார்த்தங்களை நம் ஸ்வாமி எம்பெருமானார் வழிவந்து ஈடு வ்யாக்யாநத்தில் நன்கு ப்ரகாஶப்படுத்திக் காட்டியருளினவர் என்பது நம்பிள்ளைக் குண்டான மஹத்தான வைபவமாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்